# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


**சாவு**

சாவுஎன்பத் இறுதித் தூக்கமா? இல்லை. அது தான் இறுதியாக முடிவிலேகிட்டும் புத்தெழுச்சி.

— வால்டர் ஸ்காட்

நேற்று எனக்கு; இன்று உனக்கு

சர்வ. 8—29

சாவு வாழ்வுக்கு அறிகுறி; இனி சாகாமல் இருப்பதற்காகவே நாம் சாகிறோம்.

— ஹெர்மர் ஹிக்கர்


96-ம் புத். | 1971-ம் ஆண்டு சித்திரை மாதம் 24-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 14-ம் இல


# சேனை ஊழியத்தின் பெறுமதி

ஒருவன் தனது பாஸ்குக் கடமையை நிறைவேற்றினால், அவன் ஒரு சமயச் செயல் புரிந்துள்ளான் எனக் கூறுகிறோம். அவன் பிறனொருவன் அப்பாஸ்காக் கடமையை நிறைவேற்றத் தூண்டுகோலாய் இருப்பின் அவன் ஒரு அப்போஸ்தலிக்க அலுவலைப் புரிந்துள்ளான் எனக் கூறுகிறோம். நாலு மனிதர் அவர்களின் தலைவனால் அனுப்பப்பட்டு சமுதாயத்திலுள்ள நாற்பது பேர் அக்கடமையை நிறைவேற்றச் செய்தால், அவர்கள் ஒரு சமூக அப்போஸ்தலிக்க ஊழியத்தைப் புரிந்துள்ளார்கள் எனக் கூறுகிறோம். நாலு மனிதர் அவர்கள் தலைவனால் அனுப்பப்பட்டு, பங்குக் குருவரின் வழி நடத்தலின்கீழ் நாற்பது கத்தோலிக்கரை பாஸ்காக் கடமை தீர்க்கச் செய்தால், அப்போதுதான் அப்போது மாத்திரம்தான் அவர்கள் சேனைச் சேவை செய்துள்ளார்கள் எனக்கூற முடியும். ஆகவே, மரியாயின் சேனைச் சேவையானது பங்குக் குருவரின் வழி நடத்தலின்கீழ் செய்யப்படும திட்டமிடப்பட்ட சேவையாகும். அது மிகவும் விசாலித்ததும், சக்தி வாய்ந்ததும், விரைவில் பலன் கொடுக்கக் கூடியதுமான சேவையாகும். ஆனால், அதன் முக்கியகடமை சகல விசுவாசிகளையும் பங்குக் குருவரோடு இணைத்தல்; புதியவர்களை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தல்; பங்கில் எழும் பிரச்சனைகளைப் பற்றி அவருக்கு அறிவித்தல்; அவற்றிற்கான பரிகாரத்தை அவருடைய ஆலோசனைக்கு அளித்தல்; மிக மதிப்புடன் அவருடன் கலந்துரையாடல்;

**அருட்திரு வில்லியம் யேசுதாசன், அ. ம. தி.**

ஆகியவற்றில் தங்கியுள்ளது. ஆகவே, ஒரு பிரெசிடியத் தலைவர் பங்குக் குருவருடன் கலந்தாலோசித்து ஊழிய அட்டவணை ஒன்றைத் தயாரிக்கவேண்டும். பங்கின் புள்ளிவிபரங்களைத் திரட்டவேண்டும். பங்கின் வரைபடம் ஒன்றை வரைந்து வைத்துக் கொள்ளவேண்டும். வாரா வாரம் அங்கத்தினரின் அபிப்பிராயங்களைக் கோரவேண்டும்.

பங்குக் குருவரோடு சகல விசுவாசிகளையும் இணைக்க வேண்டுமென்றால், அவர்களைப் பிரமாணிக்கத்திலும ஒத்துழைப்பிலும மாத்திரம் இணைக்கவேண்டுமென்ற கருத்தல்ல. ஆனால், நிலைத்து நிற்கும் ஓர் அப்போஸ்தல நிலையில் இணைக்க வேண்டும், அப்போஸ்தலத்துவம் சேனையாளரின் பிரத்தியேக பாக்கியமோ; கடமையோ அல்ல. அது சகல விசுவாசிகட்கும் பொதுவானது, சொந்தமானது. ஒவ்வொரு கிறிஸ்தவனும்—ஏன்—ஒவ்வொரு மனிதனும்: (1) இறைவனை அறியவேண்டும். மற்றவர் அவரை அறியச் செய்ய வேண்டும்; (2) இறைவனை நேசித்துச் சேவிக்க வேண்டும், மற்றவர்களால் நேசிக்கப்படவும் சேவிக்கப்படவும் செய்ய வேண்டும்; (3) இறைவனோடு பரகதியில் இன்புற்றிருக்க வேண்டும். ஏனையோரும் அவ்விதம் இன்புற வழிவகுத்துக் கொடுக்க வேண்டும். மனிதன் ஒரு சமூகப் பிராணி ஆனதினால் அவன் இரட்சணியத்தையும் சமூக வாழ்வின் மூலம் தான் அடையவேண்டும். ஆகவே, அப்போஸ்தலத்துவம் என்பது அகிலஉலகக் கடமையாகும். சேனையார் சகல **விசுவாசிகளையும் இக்கடமையை உணரச்செய்து**, அவர்களைச் சதாகால அப்போஸ்தலத்துவத்தில் ஈடுபடச் செய்யவேண்டும். சேனையார் தம் பங்கிலுள்ள பிரசமயக் குழுக்கள், பக்திச்சபைகள், வேறு சங்கங்கள் ஆகியவற்றோடு ஒத்துழைத்து, பங்கில் பொது அப்போஸ்தலத்துவத்தை வளர்க்கப் பிரயாசைப்படவேண்டும். அப்போஸ்தலத்துவம் ஒரு நேரிடையான செயல். மறைமுகமானதல்ல, ஒரு கிறிஸ்தவன் மரணத்துவாயில் இருந்தான். அவனுடைய நண்பன் அவனை அணுகி, "நண்பா! நீ உன் படைத்தவரைச் சந்திக்கப் போகிறாய். அதற்குத் தகுந்த விதமாய் உன்னை ஆயத்தம் செய்", என்றான். அதற்கு அவன், "நான் ஒருவருக்கும் ஒரு பொழுதும் ஒரு தீங்கும் செய்யவில்லையே" என்றான். நண்பன் அவனை விழித்து, "நண்பா! நீ எப்போதாவது, எவ்விடத்திலாவது, எவருக்காவது ஏதாவதொரு நன்மை செய்ததுண்டா," என்று கேட்டான். இக்கேள்வி அவனைத் தீவிர சிந்தனைக்குள்ளாக்கி, நடுஇரவில் கட்டிலைவிட்டு வெளியே சென்று, ஒரு நல்ல செயல் செய்தபின் அவனை மாணிக்கச் செய்தது.

பிளேற்றோ, அரிஸ்ரோடில் போன்ற அறிஞர்கள், சகல வேலைகளும் அடிமைகளுக்கானது. சுயாதீனமான மனிதன் கலை, கலாச்சார முன்னேற்றங்கட்காகப் பாடுபட வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருந்தார்கள். ஆனால் எமது கிறிஸ்து வேதம், சகல தொழில்களும் பரிசுத்த பாமதிரீத்துவத்தை மகிமைப்படுத்துகின்றன எனப் போதிக்கின்றது. சகல அலுவல்களும் பிதாவின் மகிமைக்காகவும், தொழிலாளியான சுதன்கிறிஸ்துவை முன்மாதிரிகையாகக் கண்டு பாவித்தும், தூய ஆவியின் அருளினாலுமே செய்யப்படுகின்றன. ஏனெனில், "எனது அலுவல்களில்தான் எனது நித்தியசம்பாவனையோ, நித்திய கேடோ தங்கியுள்ளது." ஒரு குளத்தினுள் நாம் ஒரு கல்லை எறிகிறோம். கல்லு விழுந்த இடத்தில ஒரு வளையல் உருவாகிறது. நடுக்குளத்தில் உருவான இவ்வளையம் குளத்தின் கரைவரைக்கும் விரிவடைந்து செல்லுவதை நாம அவதானிக்கிறோம். அதே போலத்தான் சேனைச் சேவையும். அது விரிவடைந்து நெடுந்தூரம் செல்லும் சக்திவாய்ந்தது. ஒரு சேனையாள் ஒரு படைவீரனுக்கு ஒரு துண்டுப் பிரசுரம் கொடுத்தான். அந்தத் துண்டுப் பிரசுரம் மாறி மாறி அப்பட்டாளத்திலுள்ள சகல படைவீரருக்கும சென்றது. அதன்பலன் அநேக படைவீரர்கள் கத்தோலிக்கரானார்கள்.

இரு மனிதர்கள் பனிப்படலம் நிறைந்த மலைச்சாரல் வழியாகப் பிரயாணம்செய்து கொண்டிருந்தார்கள். நடுவழியில் பனிப்படலத்தின் மேல் ஒருவன் விழுந்து உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். முதல் பிரயாணி பயத்தினால் உந்தப்பட்டு, அந்த மனிதனுக்கு உதவிசெய்யாமல் தன்வழியே சென்றான். இரண்டாம பிர

(மறுபக்கம் பார்க்க)

# வத்திக்கானிலே யூகோசிலேவிய ஜனாதிபதி

கிழக்கு ஐரோப்பிய கம்யூனிஸ் நாடுகளில் ஒன்றாகிய யூகோசிலேவிய ஜனாதிபதி ரிற்றோ அவர்கள் சம்பிரதாயப்படியே "ரெயில்சூட்" உடை அணிந்து, நீண்ட தொப்பிகரத்தேந்தியவராய்ச் சென்ற 29-3-71 திங்கட்கிழமை அதிகாரபூர்வமாக வத்திக்கானுக்கு விஜயஞ்செய்த முதலாவது கம்யூனிஸ்த தலைவரானார் என வத்திக்கானிலிருந்து தந்திச் சமாச்சாரம் கிடைத்திருக்கிறது.

78 வயதுடைய யூகோசிலேவிய தலைவர் கடுமையான பாதுகாப்புகளோடு வத்திக்கானின் பூரண கவசப்படைவீரர்கள் மத்தியில் வத்திக்கான்போய்ச் சேர்ந்து பாப்பரசருடன் 1 மணித்தியாலம் 15 நிமிஷம்வரை சம்பாஷணை நடத்தினர். அப்பொழுது துவிபாஷிகர்கள் மட்டும் அவர்களுடன் இருந்தார்கள்.

இதற்குமுன் கம்யூனிஸ்த நாடு ஒன்றின் ஒரேயொரு தலைவர்மட்டும் ஒருதடவை பாப்பரசர் ஒருவரைச் சந்தித்திருக்கின்றார். அவரும் தனிப்பட்டமுறையில் சாமானிய சாதாரண உடையில் தான் அவரைச் சந்தித்தார். அவர்தான் சோவியற் ருஷியாவின் ஜனாதிபதியான நிக்கொலாஸ் பொட்கோர்னி. அவர் 1967ஆம் ஆண்டு சின்னப்ப பாப்பரசரைச் சந்தித்து ஒருமணி நேரம்வரை அவருடன் சம்பாஷித்தார்.

ஜனாதிபதி ரிற்றோவை வத்திக்கானுக்கு அழைத்துவருமாறு ரோமைநகரிலே அவர் தங்கியிருந்த ஹோட்டலுக்கு பத்துக் கார்களைக் குருசிரேஷ்டர்கள், மற்றும் பிரபலஸ்தர்களுடன் ஒரு கூட்டமாக வத்திக்கான் அனுப்பிவைத்தது. ஜனாதிபதியும், நீண்டதொரு கருமையான உடையையும், கருமையான ஒரு முக்காடையும் தரித்திருந்த அவருடைய பாரியார் யோவான்காவும்யூகோசிலேவிய—வத்திக்கான் கொடிகளைப் பறக்கவிட்டிருந்த பாரிய மேர்சிடெஸ் கார் ஒன்றில் இவர்ந்துவத்திக்கான்போய்ச் சேர்ந்தபோது பலவர்ண யூனிபோம் உடைகள் அணிந்திருந்த சுவிஸ் காவலர்கள் பரசுகள் எனப்படும் ஆயுதங்கள் தாங்கி இருவருக்கும் இராணுவ மரியாதை செய்து நின்றார்கள். நீலவர்ண யூனிபோம் உடைகள் அணிந்திருந்த பாண்டுவாத்திய கோஷ்டி இருநாடுகளினதும் தேசிய கீதங்களை இசைத்தன.

பாப்பரசரும், ஜனாதிபதியும், மத்தியகிழக்கிலும் இந்தோசீனாவிலும் நடைபெற்றுவரும் யுத்தங்களையிட்டுக் கவலையும் தங்கள் இருநாடுகளினதும் இராசிய உறவுகளிலே சமீபத்தில் ஏற்பட்டுள்ள நன்மையான மாற்றங்களையிட்டு மகிழ்ச்சியும் தெரிவித்தனரென்று வத்திக்கான் அறிவித்துள்ளது. அதன் மேல் உலகசமாதானம் ஓங்குவதற்காகத் தாங்கள் எடுத்துவரும் சுயமுயற்சிகளையிட்டு அவர்கள் மனப்பூர்வமாக ஒருவரையொருவர் புகழ்ந்து பாராட்டினர். முக்கியமாகச் சர்வதேச பிரச்சினைகளிலே தங்கள் நோக்குநிலை சமீபமாகவோ அன்றேல் சமானமாகவோ இருப்பதாக ஜனாதிபதி தெரிவித்து, ஐரோப்பாவிலும், மத்தியதரைக் கடலிலும் ஸ்திரமான சமாதானத்தை உண்டுபண்ணுவதில் மிக்கானக ரிசனையை நாம்கொண்டிருக்கிறோம்; ஆகவே மத்தியகிழக்கு நெருக்கடியானநிலைமைமட்டிலும், அதனால் விளையக்கூடிய பேரபாயங்கள் மட்டிலும் நாம் விசேடகவனம் செலுத்துகிறோம். இந்த நெருக்கடியான நிலைமையைச் சமாதானமுறையிலே தீர்த்து அதனால் அப்பகுதியிலுள்ள சகலமக்களும், சகல நாடுகளும் சமாதானமாக வாழத்தக்கதாய் ஆகக்கூடிய முயற்சியெல்லாம் செய்துவருகிறோம் என்றும் ஜனாதிபதி கூறினின்றார்.

# நவீன உலகின் நவமான இயக்கம்
# மரியாயின் சேனை

## தோற்றம்:

"உலகின் எத்திசைக்கும் சென்று சகல சாதி சனங்களுக்கும் நற் செய்தியைப் போதியுங்கள்," என்றார் கிறிஸ்து. 12 அப்போஸ்தலர்களை நவமாய்ப் பயிற்றி, அவர்களை நாலாபக்கமும் அனுப்பி நற்செய்தியைப் பரப்பினார் கிறிஸ்து. கிறிஸ்தவ சமயமானது எத்தனையோ கஷ்டங்கள் மத்தியில், வேத கலாபனைகளின் மத்தியில் தான் வளர்ந்தது. வேதசாட்சிகளின் புனித இரத்தம்தான் எமது சமயத்துக்குப் புதுமெருகும் புத்துயிரும் கொடுத்தன. "உலக முடியுமட்டும் நான் உங்களோடு இருப்பேன்," என்ற கிறிஸ்து அதன்படியே கிறிஸ்தவ சமயத்தின் சகல திருப்பங்களிலும் திருச்சபையிலிருந்து அதனை வழிநடத்தினார். திருச்சபை வளர வளர அதன் தேவைகளும் அவசியங்களும் அதிகரித்தன. இத்தகைய தேவைகளில் திருச்சபைக்கு உதவிபுரிய காலத்துக்குக் காலம் பற்பல இயக்கங்கள், கத்தோலிக்க இல்லற விசுவாசிகள் மத்தியிலே தோன்றின. இந்த இயக்கங்கள் திருச்சபைக்கு உறுதுணையாக நின்று அதன் சேவைகளைச் செவ்வனே செய்ய உதவிபுரிகின்றன. இச்சபைகள் யாவும் தூய ஆவியானவரின் ஏவுதலாலேயே தோன்றின. இந்த இல்லறர் இயக்கங்களில் இன்று முதலிடம் வகிப்பதுதான் மரியாயின் சேனை. இந்த மரியாயின் சேனை இற்றைக்கு 50 வருடங்களுக்குமுன், அதாவது 1921 ஆம் வருடம் புரட்டாசித் திங்கள் 7 ஆம் நாள் அயர்லாந்து தேசத்திலுள்ள டப்ளின் மாநகரத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பிராங் டவ் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த இயக்கம் கடந்த அரை நூற்றாண்டு காலத்தில் உலகின் சகல இடங்களிலும் தனது கிளைகளைப் பரப்பியுள்ளது. இன்று மரியாயின் சேனை இல்லாத கண்டமோ, தேசமோ, மேற்றிராசனமோ இல்லையென்று துணிந்து கூறலாம். எமது ஈழவளநாட்டில் 1938 ஆம் ஆண்டு மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்டது. இன்று இலங்கையின் சகல மேற்றிராசனங்களிலும் சேனை செய்துவரும் சேவையோ அளப்பரியது. சுமார் 7500 கத்தோலிக்கரைத் தன்னகத்தேகொண்டு அருந்தொண்டாற்றி வருகிறது சேனை.

## நோக்கம்:

எந்த ஒரு இயக்கத்துக்கும் நோக்கம் இருந்தாக வேண்டும். அதுபோல மரியாயின் சேனைக்கும் நோக்கங்கள் இரண்டு இருக்கின்றன. ஒன்று, அங்கத்தவர்களின் சுய பரிசுத்தமும், இரண்டாவது, அயலவரின் ஆன்ம இரட்சணியம். இந்த இரண்டு நோக்கங்களும் சேனையின் இரண்டு கண்கள். மேலான, உயர்ந்த, உன்னத நோக்கங்களைத் தனது இறுதி இலட்சியமாகக்கொண்டு இயங்கிவருகிறது சேனை. முதலாவது நோக்கத்தை நிறைவேற்றச் செபத்தையும், இரண்டாவதை அடைய அப்போஸ்தலிக்க ஊழியத்தையும் கருவிகளாய்ப் பாவிக்கின்றது சேனை. உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் இரட்சணியத்தை அடையவேண்டும். ஒவ்வொரு மனிதனும் அப்போஸ்தலிக்க சேவை செய்யவேண்டும். ஒவ்வொரு மனிதனும் கடவுளை அறிய வேண்டும்; பிறர் அவரை அறியச் செய்யவேண்டும். ஒவ்வொருவனும் கடவுளை நேசிக்கவேண்டும், சேவிக்க வேண்டும்; பிறர் அவரை நேசிக்கவும், சேவிக்கவும் செய்ய வேண்டும். மண்ணுலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவனும் விண்ணுலகில் இறைவனோடு இன்பமாய் இணைய வேண்டும்; மற்றவரையும் அப்படி இணையச்செய்யவேண்டும். இவற்றைத்தான் சேனை தனது இலட்சியங்களாகக் கொண்டு செயலாற்றி வருகின்றது. ஒரு வேதபாரகர் எழுதுகிறார்: "ஒவ்வொரு கிறிஸ்தவனும் மரியாளிடமிருந்து இரண்டு பாடங்களைக் கற்றுக் கொள்ளவேண்டும். ஒன்று கிறிஸ்துவைத் தன்னுள்ளே கொண்டிருப்பது, மற்றது கிறிஸ்துவை உலகுக்குக் கொடுப்பது." இதைத்தான் செய்துகொண்டு வருகின்றது சேனை. செபம், ஊழியம் ஆகிய கடமைகளை விதித்து தனது நோக்கங்களை நிறைவேற்றுகிறது.

## யார் யார் சேரலாம்?

சேனையானது தனது அங்கத்தினர்தொகையைப் பெருக்கிக்கொள்ள ஆவலாயிருக்கின்றது. சாதாரண கத்தோலிக்க சீவியம் சீவிக்கும், தியாக உணர்ச்சியும், சேவை ஆர்வமுமுள்ள சகலரும் இச் சேனையில் சேரலாம். கிறிஸ்துவின் அரசைப் பரப்ப விரும்புவோர், கத்தோலிக்க சேவை செய்ய விரும்புவோர், தங்கள் இரட்சணியத்தை நிட்சயப்படுத்திக்கொள்ள விரும்புவோர் மரியாயின் சேனையில் சேரலாம். சிறுவர், முதியோர்; ஆண், பெண்; ஏழை, செல்வந்தன்; பாமரன், பட்டதாரி; தொழிலாளி, முதலாளி யாவருக்கும் சேனையில் இடமுண்டு. 18 வயதுக்குக் குறைந்தோர் இளைஞர்பிரிவிலும், 18 வயதுக்கு மேற்பட்டோர் வளர்ந்தோர் பிரிவிலும் சேர்ந்து சேவை செய்யலாம்.

(வளரும்)

---

# அன்று தீப்பொறி
# இன்று நெருப்புச் சுவாலை

1921 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது சேனை, கடந்த அரை நூற்றாண்டு காலமாக வளர்ந்து இன்று பாரிய இயக்கமாக வந்துள்ளது. அதன் விபரம் இதோ:-

1921 அயர்லாந்து.
1928 ஸ்கொட்லாந்து.
1929 இங்கிலாந்து, வேல்ஸ்
1931 ஐக்கிய அமெரிக்கா தேசம், இந்தியா.
1932 கனடா, அவுஸ்திரேலியா.
1933 தென் ஆபிரிக்கா. மேற்கிந்திய தேசம், நியூசிலாந்து, நைஜீரியா.
1936 கென்யா.
1937 சீனு, பர்மா, தங்கனீகா.
1938 **இலங்கை**, பனமா, உகண்டா, மொசம்பிக்.
1939 தென் றொடீசியா.
1940 பிலிப்பைன்ஸ், பிரான்ஸ், மொறிற்றியல், மோல்ரா, நைசலாந்து, கானு, சிருலெயோன்.
1941 எகிப்து.
1942 நீதலாந்து, ஜிப்றோல்டர், இஸ்ரேயேல்.
1943 கொங்கோ குடியரசு,
1944 ஜேர்மனி, லிபீரியா, பிறேசில்.
1945 பெல்ஜியம், லக்சம்பேக், சிசெலஸ், மெக்சிக்கோ.
1946 மடகஸ்கார், இத்தாலி, சுவிற்சர்லாந்து, கம்பியா, டொமினிக்கன் குடியரசு.
1947 கொலம்பியா, டென்மார்க், சூடான், மலாயா, மாறினிக், வட றொடீசியா, பிரெஞ்சு சானிய கமறூன்ஸ்.
1948 யப்பான், வியற்னும், அல்ஜீரியா, பிரான்சிய கமறூன்ஸ், மேலா, செனுகல், நோர்வே.
1949 அஸ்ரியா, லெபனுன், போர்த்துக்கல், போர்னியோ, சுவீடன், கொங் கொங், பஹாமா, பாகிஸ்தான்.
1950 ஸ்பெயின், வெனிசுலா, ஆர்ஜன்ரீனு, தொகோலாந்து, பாராகுவே, புவற்றோ றீகோ, பிஜி தீவுகள்.
1951 சைல், இந்தோனேசியா, சைபிறஸ், பேரு, அங்கோலா, உருகுவே.
1952 மகாவோ, தைவான், தாய்லாந்து,
1953 நியூகினியா கியூபா.
1954 ஈகுவேடர், கொரியா, லாவோஸ், ரனீசியா.
1955 பொலிவியா, கிரீஸ், தேக்கி, நீக்குருகுவா, பிரான்சிய கினியா.
1956 கோட்டா றீக்கா, கௌத்தமாலா, கொண்டுறூஸ், எல் சல் வடோர், ஐஸ்லாந்து, கம்போடியா.
1957 அரேபியா, எத்தியோபியா, யோர்தான்.
1958 ஈறுக்.
1959 லிபியா, பிரான்சிய சோமாலிலாந்து.
1962 அலாஸ்கா.
1965 ஜமேக்கா.

* சேனைச் செபங்கள் 100 பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளன.

** அகில உலகிலும் 1300 மேற்றிராசனங்களில் சேனை அடியிடப்பட்டுள்ளது.

ஆர். சி. எம்.

---

## சேனை ஊழி....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

யாணியோ, அந்த மனிதனைத் தூக்கித் தன்தோள் மேலே சுமந்து சென்றான். தான சேரவேண்டிய இடத்தை அடையும்போது, முதலாம் பிரயாணி மலையடிவாரத்தில் குளிரினால் இறந்து கிடக்கக் கண்டான். இரண்டாம் பிரயாணியோ, தான தூக்கிச் சென்றவனின் தேகச் சூட்டினால் குளிரிலிருந்து காப்பாற்றப்பட்டான். அந்த மனிதனையும் காப்பாற்றினான். ஆகவே எனது அயலானுக்கு நான் செய்யும் நன்மை, எனக்கே நன்மையாகும். ஆகவே பிறருடைய ஆன்ம இரட்சணியத்தை நோக்கமாகக் கொண்டு, சேனையாளாக வந்தால் அது எனது ஆன்ம இரட்சணியத்தை நிச்சயப்படுத்தும்,

---

● மனித குரங்கின் முகத்தைப்போன்ற முகமும், தோளிலிருந்து முழங்காலுக்குக் கீழ்வரை வெளவாலின் சிறகுகளைப்போன்ற நீண்டசிறகுகளும், கருஞ்சிவப்புநிற மயிர்களால் மூடப்பட்ட உடலுமுள்ள—சராசரியாய் நான்கு அடி உயரமுடைய மனிதர் சந்திரனில இருப்பதைப் பிரபலபிரித்தானிய வானியல் விஞ்ஞானியான சேர்ஜோன் ஹேர்செல் அவர்கள் சக்திவாய்ந்த ரெலெஸ்கோப் வழியாகக் கண்டறிந்து செய்தி வெளியிட்டிருக்கின்றார்.

● அமெரிக்க மக்கள் இனிமேல் விசேட அனுமதிச் சீட்டின்றியே சீனுவுக்குப் பிரயாணஞ் செய்யலாமென அமெரிக்க அரசாங்கம் தெரிவித்திருக்கிறது இதுசெயல் அமெரிக்கமக்களும், சீனமக்களும் பரக்கத் தொடர்பு கொள்வதற்கேயாகும். ஆனல், சீன அரசாங்கம் விசேட பிரயாணிகளுக்கெனச்சில அமெரிக்கருக்கே விசா வழங்குகின்றது.

● பம்பாய் நகருக்கு வடக்கேயுள்ள கம்பே வளைகுடாவுக்குச் சமீபமாகக் கடலடியில் எண்ணெய்க்கிணறு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்திய கடற்கரையோரமாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள முதலாவதுஎண்ணெய்க் கிணறு இதுவாகும். இது அல்பேட் கிணறெனஅழைக்கப்படுகிறது.

● புற்றுநோய்கண்ட பிணியாளர்கள் "இறுதியாத்திரை"செய்வது நிச்சயமென்று சொல்லப்பட்டகாலம் இல்லாதொழியும்போல் இருக்கிறது. ஏனெனில், மேற்கு ஜேர்மனியிலுள்ள பிறும்போட் பல்கலைக்கழகத்தில் பல்லாண்டுகளாக நடத்திய ஆராய்ச்சியின் பயனுகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள புதிய சிகிச்சை பெரும்வெற்றி அளித்திருக்கிறது.

---

✠

ஜெயநாதன் ஜேம்ஸ்
அவர்களின்

### 17-ம் வருட
### மரண ஞாபகம்

தோற்றம்: 24-6-36. மறைவு: 21-4-54.

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே! மரணத்திலும் மறவாதீர்கள்."

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக எதிர்வரும் 21-4-71-ம் திகதியன்று காலை சில்லாலை கதிரமாதா தேவாலயத்தில் திவ்விய நக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் அனைவரும் அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

பெற்றோர், சகோதரர்.
சில்லாலை.

---

✠

### 2-ம் வருட ஞாபகம்

திரு. சவரிமுத்து
டோமினிக்குப்பிள்ளை அவர்கள்
இறைவனடிசேர்ந்த
**2-ம் வருடம்— 11-4:71**

தோற்றம்: 23-8-1896 மறைவு 11-4-1969

"இறைவா, இவரின் ஆன்மாவைப் பாவங்களின்னறும் விடுதலையாக்கும். உமது பேரருளின் உதவியால் இவர் சதா பேரின்பத்தை அனுபவிப்பாராக."

இதைக் கண்ணுறும் இறைமக்கள் யாவரும் இவர்தம் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக் கொள்ளுமாறு இரந்துகேட்கும்,-

மனைவி:
திருமதி டோமினிக்குப்பிள்ளை
மற்றும்: மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
136, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

---

✠

திரு: அமிர்தநாதர்
சூசைப்பிள்ளை அவர்களின்

### 2-ம் வருட
### மரண ஞாபகம்
**மறைவு: 27-4-69**

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நிகழும் சித்திரை மாதம் 27-ந் தேதி செவ்வாய்க்கிழமை காலை மிருசுவில், அர்ச். நீக்கலஸ் ஆலயத்தில் நக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப் படுமென்பதை உறவினர், சிநேகிதருக்குத் தயவுடன் அறியத்தருகின்றோம்.

இதனைக் கண்ணுறும் மற்றும் அனைவரும் இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டுமாறு தயவுடன் கேட்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மிருசுவில்

---

### நன்றித் துதி

யேசுவின் திருஇருதய இரக்கத்தினாலும், பரிசுத்த சகாயத்தாயின் பரிவுரையினாலும், கல்லறை ஆண்டவரின் இரத்தத்தாலும், புனித யூதாததேயுவின் வேண்டுதலாலும், அந்தலோசுவாமியாரின் மன்றாட்டினாலும எனக்குவந்த வருத்தம் நீங்கியது. இன்னும் நல்லசுகம் கிடைக்கும்படி இவர்களைப் பிரார்த்தித்து, நேர்த்திப்படி பிரசுரிக்கிறேன். ஓர் அடியாள்

# இளைஞர் உலகு



அன்புநிறை சோதரர்க்கு,

முதலில் அனைவருக்கும் ஈஸ்டர் வாழ்த்துக்கள். இந்துசமய சோதரரும் இளைஞர் உலகைப் பாராட்டியும் படித்தும் வருவதால அவர்களுக்குப் புத்தாண்டு வாழ்த்துக்களை இளைஞர் உலகு இயம்புகிறது.

சிறக, விவாதமேடையில் அதிகமானோர் பங்கு பற்றுவதுகண்டு மிக்க மகிழ்ச்சி. பாராட்டுக்களும் குவிந்துகொண்டேயிருக்கின்றன. இன்னும் காவலன் விற்பனையில் அதிக இளைஞர் ஆர்வம்காட்டிவருகின்றனர் என்பது அவர்களின் கடிதங்களிலிருந்து தெளிவாகிறது. அல்வாயைச் சேர்ந்த இ. பி. மரியசாந்தினி விற்பனை பற்றிய அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். வெளியூர்களில் இளம் பெண்களே வீட்டுக்குவீடு சென்று விற்பனை செய்கின்றனர். உடனே பணத்தைப் பெற்றுவிட்டால் மிக எளிது. இது ஒரு சமய சமூகப் பணியும் ஆகும்.

ஏனைய இளைஞரும் இம் முயற்சியில் பங்கு கொண்டு தமது கண்பார்த்தும் இளைஞர் உலகை அறிமுகம் செய்துவைத்தால் இந்தப் பெருமை உங்களுடையதே.

அன்புள்ள சோதரன்.

# இளைஞரே உயிர்பெறுவோம்!

தலைப்பைப் படித்ததும் இளம் உள்ளங்களின் உள்ளத்தில் ஒரு கேள்வி?— சந்தேகம்! நாம் என்ன உயிர் அற்றவரா? நடமாடும் பிணங்களா என்ற கேள்வி எழத்தான் செய்யும். உண்மையைக் கூறினால் நாம் நடமாடும் பிணங்கள்தான்—உயிரற்றவர்கள்தான், இளைஞர், சமுதாயத்தில் ஆற்றவேண்டிய பெரும் பொறுப்பை உணர்கிறோமா? நாட்டுக்கு ஆற்றவேண்டிய பணியை ஆற்றினோமா? இன்றைய இளைஞர் சமுதாயம் தன்னையே கேட்கவேண்டிய கேள்வி இது.

இன்று நடப்பது...காலம் வீணாகிறது; காரியம் நடைபெறவில்லை. நிமிடத்துக்கொருகோலம். இதுவா இளமையின்பாலம்? மக்கள் அனைவரும் இறப்பவர்கள்தான். உலகு ஒப்புக்கொண்ட உண்மை. இருப்பவர்கள் இருக்கும் காலம்வரை ஆற்றுவதென்ன? ஆற்றியதென்ன? உலகை உலக மக்களை வாழவைக்கவேண்டியவர்கள் இளைஞர். தம் வாழ்வில் கிறிஸ்து மூவருக்குத்தான் உயிரளித்ததாக நற் செய்தி நமக்கு எடுத்துக்காட்டுகிறது. ஒன்று, லாசர் இரண்டு, நயீம்பட்டண இளைஞன் மூன்று, ஜயீர் மகள். பிந்திய இருவரும் இளைஞர். அந்த இளைஞன் தாய்க்கு ஒரே மகன். அவனை வாழவைக்க வேண்டியவன் இறந்தான். அந்தப் பெண்ணும் இள வயதினள். மக்களுக்கு நன்மை பல செய்தவள். அவள் பிரிவை மக்கள் பொறுக்கவில்லை. யேசுவின் கருணை உள்ளம் மடைதிறந்தது. மாண்ட அந்த இருவரும் மீண்டெழுந்தனர். அவர்கள் வாலிப வயதினர், உலகை வாழவைக்கவேண்டியவர்கள். உயிர்பெற்று உலக வாழ்க்கை நடத்தினர். நற்பணி புரிந்தனர்.

ஏன் கிறிஸ்துகூட வாலிப வயதிலேதான் உயிர் நீத்து உலக இரட்சணியமான உன்னத பணியை நிறைவேற்றினார். இளைஞரே! இளமைப் பருவத்தின் இலட்சியத்தை உணர்ந்துவிட்டீர்களா?

குருதி சிந்திக் குவலயம் மீட்ட இறைமகன் யேசுவின் இளமைப்பருவம் மாண்டு மடிந்து மீண்டும் உயிர் பெற்ற நற்செய்தி இளைஞரின் இளமைப்பருவம்—ஏன் இளமைப் பருவத்தினரான (நற்செய்தி) அருளப்பர்மீது யேசு கொண்ட அளப்பரிய அன்புக்கும் இளமைதான் காரணம். "இங்கே ஒருவன் இருக்கிறான் அவனிடம் 5 அப்பங்களும் இரண்டு மீன்களும் இருக்கின்றன" ஆம் அவனும் இளைஞன்தான். வனாந்திரத்தில் வாடிச் சோர்ந்த மக்களுக்கு வாழ்வளித்தான்.

பழையேற்பாட்டில் சங்கீதத்தில், "என் இளமைக்கு மகிழ்ச்சிதரும் சருவேசுரனிடம் செல்வேன் என்றொரு சங்கீதம் வருகிறது. கொடிய துன்பம் பல அனுபவித்துச் சிலுவை மரணம் ஏற்று உயிர்நீத்த யேசு மீண்டும் உயிர்பெற்று எழுந்துவிட்டார்.

# களத்தில் கருத்துமோதல்!

இளம் பெண்கள் உத்தியோகம் பார்ப்பது பற்றிய கருத்து மோதலில் அதிகமானோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். பெருமளவில் பெண்கள் உத்தியோகம் பார்ப்பதை விரும்புகின்றனர். இருந்தும் பெண்கள் எதிர்ப்பும் தெரிவித்துள்ளனர். ஆண்கள் பலர் கண்டிப்பாக எதிர்த்திருந்தபோதிலும் சிலர் ஆதரவும் அளித்துள்ளனர். ஒரேமுறையில் கருத்துக்களை வெளியிட முடியாமைக்கு வருந்துகிறோம், மிகுதி அடுத்த இளைஞர் உலகில் தொடரும். 15 நாட்களுக்குள் விவாதமேடைக்கான விடயங்களை அனுப்பவும். இதன் பின்வரும் விடயங்கள் கவனிக்கப்படமாட்டா. மிகவும் சுருக்கமான முறையில் கருத்துக்களைத் தெரிவிப்பதே நன்று. ஒரே கருத்தைப் பலர் தெரிவித்திருப்பதால் அவற்றை மீண்டும் மீண்டும் இங்கு குறிப்பிடவில்லை.

இதோ களத்தில் குதிக்கின்றனர்:

ஆண்துணையற்ற குடும்பங்களில் படித்த பெண்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் அருங்குணங்களோடு உத்தியோகம் பார்க்கலாம்.

—செல்வி மேரி லூசியா தோமஸ்,
சர்வகலாசாலை,
பேராதனை.

பெண்கள் கற்பது நாடாள அல்லது பட்டம் பதவி ஏற்க அல்ல. மக்களைப் பெற்றெடுத்து அவர்களை நற் பிரஜைகள் ஆக்கவே. உத்தியோகம் பார்ப்பதால் இக் கடமை அலட்சியம்செய்யப்படுகிறது. எனவே உத்தியோகம் பார்ப்பது தவறு.

—செல்வி அ. யசிந்தா தேவராணி,
மயிலிட்டி.

## விவாத மேடை இல. (3)

இளைஞர் சுதந்திரத்தை விரும்புபவர்கள். கட்டுப்பாடு அவர்களுக்கு அறவே பிடிக்காது; எதையும் செய்யலாம். எங்கும் செல்லலாம். இன்று உலகெலாம் பெரும் புரட்சிகள்; இவற்றிற்கு இளம் ஆண்—பெண்களே காரணம் எனக்கப்படுகிறது. எனவே இளைஞருக்கு (ஆண்—பெண்) கட்டுப்பாடு அவசியம்—அவசியம் இல்லை. இதுதான் 3ஆம் கருத்து மோதல். எங்கே உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள். 15 நாட்களுக்குள் விடைகள் எமக்குக் கிடைக்கவேண்டும்.

---

இதோ! இளைஞனே எழுந்திரு! பெண்ணே எழுந்திரு!! என்று அன்று யேசு கூறிய வார்த்தைகள் இன்றும் இளைஞர் உலகில் ஒலித்துக்கொண்டுதானிருக்கின்றன. இளைஞரே வாரீர் செவிமடுப்போம்! செயல்புரிவோம்!! புவி போற்றப் பணிபுரிவோம்! புனித வாழ்வு பெறுவோம்.

இளைஞனே எழுந்திரு!

—திராட்சையூரான்

மங்கா ஒளிவிளக்காய் விளங்கும் இல்லத்தாள் வேலை பார்க்கச் சென்றால் வீட்டின் நிலையும், குழந்தைகளின் நிலையும் என்னவது? கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் நேரத்திற்கு உணவுகூடக் கிடையாது. எனவே இது தவறு.

—இ. அருள்நேசன்,
நெடுந்தீவு.

இவ் விண்வெளியுகத்தில் எல்லாவிடயங்களிலும் ஆண்களுடன் பெண்கள் போட்டி போடுகின்றனர். இச் சம உரிமைப் போராட்டத்தை நோக்குமிடத்து உத்தியோகம் பார்ப்பது தவறு அல்ல.

—அகஸ்ரின் றொட்றிகோ,
கண்டி.

பெண் வருங்காலத்தின் இல்லத்தலைவி என்ற எண்ணத்தை மனதிற் கொண்டு உத்தியோகம் பார்ப்பது தவறு. குடும்பவட்டத்தை விட்டுப் பிரிவது அழகும் அல்ல; பண்பும் அல்ல.

—செல்வி ருணிபர்ணன்டோ,
மன்னார்.

பெருகிவரும் நாட்டின் தேவைகளுக்கு உழைக்கும் ஆண்களின் கரங்களோடு சேர்ந்துழைக்க பெண்கள் கரங்களின் உதவிவேண்டும். தன்னடக்கம், கடமைஉணர்வு உள்ள பெண்கள் உத்தியோகம் பார்க்கலாம்.

—திருமதி இராசேஸ்வரி ஞானப்பிரகாசம்,
புங்குடுதீவு.

பெண்களுக்குப் பிள்ளைகளைப் பேணுவதைவிடச் சிறந்த தொழில் இல்லை. இன்றைய குழந்தைகள் நாளைய உலகை ஆளும் தலைவர்கள். இதை மனதிற்கொண்டு இதனைக் கைவிடவேண்டும். பெண்களுக்குரிய நாற்குணங்களும் பாதிக்கப் படுகின்றன.

—அ ஹெறபேட்,
புத்தளம்.

நாட்டைக்காக்கும் நகராகாவலரிலிருந்து நாட்டை ஆளும் ராணிவரை பெண்கள் உயர்ந்துவிட்டனர். அவர்கள் நிலை இப்படி இருக்கும்போது உத்தியோகம் பார்ப்பது தவறு என்று கூறுவது பொருத்தமில்லாதது ஒன்றாகும்.

—'செந்தாசன்',
மிருசுவில்.

எண்ணற்ற குடும்பங்களில் இளம் பெண்களே நுழைந்து குடும்பத்தைப் பேண வேண்டியநிலையில் உள்ளனர். அவர்கள் உத்தியோகம்பாராதுவிட்டால் ஏழ்மையில் வாடும் அந்தக் குடும்பத்தை யார் காப்பாற்றுவது? பெண்களின் சேவை நாட்டுக்குத் தேவை. ஆகவே உத்தியோகம் பார்க்கவேண்டும்.

—செல்வி ஜசிலடா பர்ணன்டோ,
கொழும்பு 15.

பெண்கள் தம் கவனத்தைக் குடும்பநலனில் செலுத்துவதே மேல். காரணம் பெண்களில் எத்தனையோ பேருக்குச் சமையல் தெரியாது. உத்தியோகம் பார்ப்பதால் அவர்களின் பிள்ளைகள் 'ஆயா'வின் கண்காணிப்பில் வளருகின்றபடியால் தாயன்பற்ற சூழ்நிலையில் வளருகிறார்கள். மேலும் உடலழகு கெட்டுவிடும் என்ற காரணத்துக்காகத் தாய்ப்பாலையே ஊட்ட மறுக்கின்றனர். இவை உத்தியோகம் பார்ப்பதினாலல்லவா?

—எஸ். துரை,
89, சென். பெனடிக்ற் வீதி,
கொழும்பு 13

குடும்ப செலவுகளுக்கு ஈடு கொடுக்கவும் வருவாயை அதிகரிக்கவும் உத்தியோகம் பார்க்கவேண்டும். இதனால் அறிவு மேலும் விருத்தியடைகிறது; பெண்கள் அடிமைநிலையும் மறைகிறது!

—செல்வி சுசிலா பர்ணன்டோ,
யாழ்ப்பாணம்.

அடக்கத்துடனும் கற்பொழுக்கத்துடனும், கடமையுணர்ச்சியுடனும் உத்தியோகம்பார்ப்பது பாராட்டத்தக்கது. கணவன், பிள்ளைகள் என்ற பெரும் பொறுப்பிருந்தால் உத்தியோகம் பார்ப்பது சாத்தியமாகாது.

—றெமிசியா குரூஸ்,
பேசாலை.

பேணி வளர்த்த பெற்றோர்க்கும் கரம்பிடித்த கணவருக்கும் நல்லோர் அனைவருக்கும் அன்பு என்னும் ஆனந்த வெள்ளத்தால் நீராட்டுபவள்தான் பெண். இத்தகைய உயர்ந்த இலட்சியம்கொண்டவள் உத்தியோகம் பார்க்கச்சென்றால் நற் பண்புகளிலிருந்து விலகிவிடுவாள். ஆகவே அரிவையர்க்கு உத்தியோகம் ஆகாததொன்றாகும்.

—செல்வி லூட்ஸ் அ.
நெடுந்தீவு.

பெண்களின் முக்கிய கடமை குடும்பத்தைப் பேணிப் பாதுகாத்தல். வீட்டுப் பொருளாதாரத்தைப் பெருக்க உத்தியோகம் அவசியம் இல்லை, தையல், காய்கறித் தோட்டம் செய்தல், ஆடு, மாடு, கோழி, தேனீ என்பன வளர்த்தல் இவற்றின்மூலம் அதிகம் பணம் சம்பாதிக்கமுடியும். வீட்டிலிருந்தே சமூகப் பணிகளிலும் பங்குகொள்ளலாம். எனவே உத்தியோகம் பார்ப்பது அவசியம் இல்லை.

-மரிய கனியூட் ஜெயேந்திரா,
நெடுந்தீவு

குடும்ப வறுமையைப் போக்கவும் வயதான பெற்றோர்க்கு உதவவும் பெண்கள் வேலை பார்க்கலாம்.

—புனிதமலர் வரப்பிரகாசம்,
கந்தளாய்.

பெண் என்ற சீரியநோக்கம், கூரிய மனக் கட்டுப்பாடு இவற்றுடன் கூடிய பெண்கள் எவ்வித உத்தியோகத்தையும் அச்சமின்றி ஏற்றுக் கொள்ளலாம். பாடசாலை, வைத்தியசாலை போன்ற இடங்களில் பெண்கள் அவசியம்சேவையாற்றவேண்டும்.

— செல்வி 'செபர்'
நெடுந்தீவு.

பி. கு.:— தமது முழுப் பெயர் விலாசத்தைத் தெரிவிக்கவேண்டும். விரும்பினால் அவர்களின் புனைபெயரில் பிரசுரிக்கப்படும்.

—வளரும்

# சிலுவைக் கழுமரத்தின் வரலாறும் மகிமையும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சென்றவாரம், சிலுவையின் வகைகளை ஆராய்ந்தோம். இனி சிலுவை மரணமும், சிலுவைத் துன்பமும் எத்தகையது எனச் சிறுக நோக்குவோம்.

அசைவுமரம் எனப்படும் குறுக்குமரம் சாதாரணமாக நாலு அல்லது ஐந்து அடி நீளமுள்ளதும், குற்றவாளியால் சுமக்கக்கூடியதும், குற்றவாளியைத் தாங்கக்கூடிய பலமுள்ளதுமாய் இருந்தது. இந்த மரத்தைக் குற்றவாளி தானாகவே இரு தோள்களின்மேலோ அன்றேல் ஒரு தோளின்மேலோ சுமந்து செல்வது வழக்கம். யேசுவும் இவ்வண்ணம் அசைவு மரத்தைத்தான் சுமந்து சென்றிருக்கவேண்டும்.

சிலுவையில் குற்றவாளிகள் அனுபவிக்கும் சரீர வேதனை சொல்லுந்தரமன்று. தண்டனை வழங்கும் போர் வீரரும், பணியாளரும்கூட குற்றவாளிகள் படும் அவஸ்தையையும், அல்லலையும் பார்க்கச் சகிக்க மாட்டார்களாயின் அத் துன்பத்தைத் தாங்குபவர்கள் எத்துணை அவலப்படுவார்கள் என்பது வெள்ளிடைமலை.

சிலுவையில் வதைக்கப்படும் குற்றவாளிகள் படும் துன்பத்தைக் காணச் சகிக்காத கொலைஞர் அக் குற்றவாளிகளின் கெண்டைக் கால்களை முறித்தோ, விலாவில் ஈட்டியால் குத்தியோ அவர்கள் பிராணனைப் போக்கி வேதனைப்படும் நேரத்தைக் குறுகச் செய்வார்களாம். சிலசமயம் சிலுவை மரத்தைச் சூழத் தீ மூட்டப்படும். பிறகு எரிவதால் எழும்புகை குற்றவாளிகளின் மூச்சைத் திணறச்செய்து விரைவில் பிராணனை அடங்கச்செய்கிறது.

சிலுவையில் அறையப்படுவதனால் மரணம் ஏற்பட உடன்காரணங்கள் ஆற்றொணாப் பசி, அடங்காத தாகம் அல்லது இரத்தப்பெருக்கு அல்லது இடையிடற்ற உடல் நோவினாலும் வலியினாலும் ஏற்படும் உடற்தளர்ச்சி என்பனவாகும். ஆனால் உயிரின் இயக்கத்துக்கும், உடலின் இயக்கத்துக்கும் இன்றியமையாத உறுப்புகள் எதுவும் நேரடியாகப் பாதிக்கப்படுவதில்லை என்பது கவனிக்கத்தக்க அம்சமாகும். முடிவாக நீண்ட ஆராய்ச்சிகளின்பின் (Asphyxia) அஸ்பிக்ஸியா என்னும் நிலைதான் சிலுவையின் மரணத்துக்கு காரணமாகும் என்று டாக்டர் ஹினெக் (Dr R. W. Hynek) என்பவர் தெரிவித்திருக்கிறார். Asphyxia என்பது சுவாசத்தை நிறுத்துவதனால் மரணம் ஏற்படச் செய்வது ஆகும்.

டாக்டர் ஹினெக் தொண்டர்கள் பலரின் உதவியோடு செய்முறைமூலம் பரீட்சித்தபோது சிலுவையில் கட்டப்பட சம்மதம் தெரிவித்த பலர் 10 நிமிடங்களுக்கு மேல் சிலுவையில் இருக்க விரும்பவில்லை எனத் தெரிவிக்கிறார். மேலும் அவர் கூறியுள்ளதாவது, 10 நிமிடங்களில் தொண்டர்களின் சுவாச இயக்கம் கடினமானதாகவும், சிரமமானதாகவும் தென்பட்டது. ஐந்து நிமிடங்களிலேயே தசைகளிலும், மூட்டுகளிலும், இருதயத்திலும் நோவு ஏற்பட்டதென்றும், நேரஞ்செல்லச்செல்ல இந்த நோவு அதிகரிக்கவே தொண்டர்கள் 10 நிமிடங்களுக்குமேல் சிலுவையில் தொங்க மறுத்துவிட்டனர் என்பதாகும். 10 நிமிடங்கள் இந்த நோவும் வலியும் தாங்கமுடியாதவொன்றாயின் பலமணிநேரம் குற்றவாளிகள் பட்ட அவலமும் அவஸ்தையும் எவ்வாறாயிருந்திருக்கும் என்பதை வாசகர்கள் ஊகித்துக்கொள்ளலாம்.

டாக்டர் லெடென்யி (Dr. Ledenyi) என்பவரும் சிலுவைத் துன்பத்தின் இயல்புகளைப்பற்றி ஆராய்வுகளை நடத்தியவர் ஆவர். சிலுவையில் நெடுநேரம் கைகளை விரித்திருப்பதனால் சுவாசிப்பு தடைப்படுத்தப்படுகிறது. அதனால் இரத்த சுற்றோட்டமும் தடுத்துநிறுத்தப்படுகின்றது என்றும், இரத்த சுற்றோட்டம் நிகழாவிடில் இரத்தம் சுவாச உறுப்புகளிலிருந்து பிராணவாயுவைப் பெறமுடியாது. அதனால் (Asphyxia) அஸ்பிக்ஸியா எனப்படும் மூச்சுத் திணறல் நிலை ஏற்பட்டு மரணம் சம்பவிக்கிறது என்றும் டாக்டர் ஹினெக்கின் கூற்றை வலுப்படுத்தி ஊர்ஜிதம் செய்கிறார்.

தசைகளின் மிக உச்சமான வலிப்புநிலை ஏற்பு வலிப்புநிலைதான். அதே தன்மையான வேதனைதான் சிலுவைத் தண்டனை பெறும் ஒரு குற்றவாளி அனுபவிக்கிறான் என்று டாக்டர் ஹினெக் தெரிவித்துள்ளார். தசைகளில் தொடர்பான பிடிப்பு ஏற்பட்டு, குற்றவாளி முழு அறிவோடு இருக்கும்போதே புத்தி தடுமாறி, சித்தசுயாதீனத்தை இழந்து பைத்தியம் பிடிக்கும்படி செய்துவிடுகின்றது. உடலின் மூட்டுக்களும், முண்டப் பகுதியும் குறுகி அரை வட்டவடிவமாகக் குவிவடையும். ஏற்புவலி நிலைக்கும் சிலுவைத் துன்பத்துக்கும் நெருங்கிய உடன்பாடு காணப்படுகிறது என்று டாக்டர் ஹினெக் தமது ஆராய்வுகளின் முடிவைத் தெரிவித்துள்ளார்.

பன்நெடுங்காலமாக இத்தகு தண்டனை உலகின் பெரும்பகுதிகளில் வழக்கில் இருந்தது. சிலுவை ஆரம்பகாலக் கிறிஸ்தவர்களால் கூட வெறுக்கப்பட்ட சின்னமாய்த் திகழ்ந்தது.

எஸ். எம். ஜே.

ஆனால் கி. பி. 4ஆம் நூற்றாண்டில் ரோமைப் பேரரசின் சக்கரவர்த்தியாய்த் திகழ்ந்த மகா கொன்ஸ்ரன்ரைன் என்பவரின் ஆட்சிக்காலத்திலேதான் கிறிஸ்தவர்களின் அடையாளச்சின்னமாக மிளிரத் தொடங்கியது. மாமன்னன் கொன்ஸ்ரன்ரைன் கிறிஸ்துசமயத்தை ரோமைப் பேரரசின் அரச மதமாகப் பிரகடனஞ் செய்தான். 4ஆம் நூற்றாண்டிலேதான் மாமன்னன் கொன்ஸ்ரன்ரைனின் தாயார் புனித கெலனாள் யெருசலேமுக்குச் சென்று யேசு அறைந்து கொல்லப்பட்ட உண்மைச் சிலுவையைக் கண்டெடுத்த சம்பவம் சரித்திர ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. கி. பி. 326-ம் ஆண்டிலே திருச்சிலுவை கண்டெடுக்கப்பட்டதை நினைவுகூரும் பொருட்டு வருடாவருடம் வைகாசிமாதம் 3ஆம் திகதி சிலுவை கண்டெடுத்த திருநாள் கொண்டாடப்பட்டு வருகின்றது. பிரதி வருடமும் புரட்டாதி மாதம் 3ஆம் தேதி சிலுவை உயர்த்தப்பட்ட திருநாள் கொண்டாடப்படுவது வழக்கமாகி விட்டது.

இன்று மிகப் புனிதமான சின்னமாகத் திகழும் சிலுவைக்குக் கத்தோலிக்க திருச்சபை — அனைத்துலகிலும் பெரிய வெள்ளிக்கிழமை அன்று மகோன்னத வணக்கமும் மரியாதையும் செலுத்துகின்றது. பெரிய வெள்ளிக்கிழமை ஆலயங்களில் திருச்சிலுவை வழிபாடு நடைபெறும். சிலுவை பூச்சியமாய் வைக்கப்பட்டிருக்கும். மக்கள் ஆலயங்களுக்குச் சென்று முழந்தாள் மடித்து ஆராதனைக்கு வைக்கப்பட்டிருக்கும் திருச்சிலுவையை பக்தியுடனும் மேரை மரியாதையுடனும் முத்தஞ்செய்து வணங்குவர். "திருச்சிலுவைமரம் இதோ! இதிலேதான் தொங்கியது உலகத்தின் இரட்சணியம்; வருவீர் ஆராதிப்போம்" என்று குருவானவர் பாடி மக்களை அழைப்பார். ஒரு காலம் ஏளனச் சின்னமாக, பழிப்புக்குரிய மரமாகவிளங்கிய சிலுவை அனைத்துலக கிறிஸ்துவர்களின் புனிதச் சின்னமாக, வணக்கத்துக்குரிய பொருளாக விளங்குகிறது. கிறிஸ்தவர்கள் சிலுவை அடையாளத்தைத் தம்மேல் வரைகிறார்கள். திருச்சபை திருச்சிலுவை அடையாளத்தை வரைந்து ஆட்களையும் பொருளையும் ஆசீர்வதிக்கின்றது. ஆலயங்களிலும், இல்லங்களிலும், கோபுர உச்சிகளிலும், வீட்டுக் கதவுகளிலும் எங்கெங்கு கிறிஸ்தவர்கள் உளரோ அங்கெல்லாம் இப் புனிதச் சின்னம் இலங்கும். ஆதாம் ஒரு மரத்தின் கனியால் உலக மக்கள் இனத்தின் அழிவுக்கும் பாவ இருளுக்கும், நித்திய பேரின்ப இழப்புக்கும் காரணமானான். சாபத்துக்கு ஏதுவாயிருந்த அந்த மரம் கிறிஸ்துவினால் இரட்சணியத்தின் கருவியாகத் திகழ்ந்து இன்று அந்தச் சிலுவைமரம் புனிதசின்னமாய் பாவ இருள் போக்கும் பற்றுக்கோடாய்விளங்குகின்றதன்றோ.

## உங்களுக்குத் தெரியுமா?

"மரியாயின் குரல்" என்ற சஞ்சிகையைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டுள்ளீர்களா? மரியாயின் சேனையின் உத்தியோகபூர்வமான வெளியீடு. இலங்கை செனாத்துஸ் சபையால் வெளியிடப்படுகிறது. மூன்று மாதங்கட்கு ஒருமுறை வெளிவரும் இச்சஞ்சிகை இலங்கையில் வெளியாகும் ஒரேயொரு சேனைத் தமிழ் சஞ்சிகையாகும். சேனையைப்பற்றி விரிவாக அறிய இச் சஞ்சிகை உங்களுக்குத் துணைபுரியும்.

விலை: சதம் 15 மாத்திரம்.

விபரங்கட்கு: உங்கள் விசாரணைப் பங்கிலுள்ள மரியாயின் சேனையாளரோடு தொடர்பு கொள்ளுங்கள்.

அல்லது அதன் ஆசிரியரோடு தொடர்பு கொள்ளுங்கள்.

ஆசிரியர் முகவரி: திரு. ஆர். சி. மரியட்டாணம்,
ஆசிரியர், "மரியாயின்குரல்,"
11/7, பழைய டிஸ்பென்சறி லேன்,
கொழும்பு 2.

● மோட்டார் வாகனங்களின் பின்புறமாகச் சிவப்பு விளக்குகளுக்குப்பதில் நீலவிளக்குகளைப் பொருத்தவேண்டுமென்று ஜேர்மன் கண்வைத்திய நிபுணர்கள் சிபாரிசு செய்திருக்கிறார்கள். ஏனெனில், கண்பார்வைக் கோளாறுள்ளவர்கள் சிவப்பு, பச்சைநிற விளக்குகளைத் தெளிவாகப் பார்க்க முடியாது. ஆனால், நீலநிறவிளக்குகளைத் தெளிவாகப்பார்க்க முடியும். அதனால் விபத்துகளைக் குறைக்க முடியுமென்று அவர்கள் கூறுகிறார்கள்.

## ஞானோபதேச கருத்தரங்கு

சென்ற 24-ம், 25-ம் திகதிகளில் மேற்படி கருத்தரங்கு அதி வண. பிதா G. T. பாலசுந்தரம் அவர்களது தலைமையில் அச்சுவேலி புனிததெரேசா உயர்நிலைப் பள்ளியில் நிகழ்ந்தது. அச்சுவேலி, கரவெட்டி, பருத்தித்துறை, வசாவிளான், மயிலிட்டி, ஊறணி ஆகிய விசாரணைப்பகுதிகளிலிருந்து திரண்டிருந்த 100-க்கு அதிகமான பிரதிநிதிகளும், பொதுமக்களும் இக்கருத்தரங்கில் பங்குபற்றிப் பெரும்பயன் அடைந்தனர்.

முதலாவது தினத்தில் அதி வண. தலைவர் சுவாமியவர்கள் சென்ற ஆண்டு மார்கழிமாதம் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் நிகழ்வுற்ற அகிலஇலங்கை ஞானோபதேசக் கருத்தரங்கு மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை நடைமுறைப் படுத்துதல் பற்றியும், சங். சகோதரி சில்வேரியா H. F. அவர்களால் "கிறீஸ்தவ குடும்பங்களில் வேதாகமம் வகிக்க வேண்டிய இடம்" என்பது பற்றியும், இரண்டாவது நாளில் அதி வண. தலைவர் அவர்களாலும், கனம் அடைக்கலமுத்து ஆசிரியர் அவர்களாலும் முறையே "மறைக்கல்வியின் நவீனமுறைகள்", "இன்றையஇளைஞர் பிரச்சினைகள்" என்பன பற்றியும் உபந்நியாசங்கள் நிகழ்த்தப்பட்டன.

கருத்தரங்குக்குச் சமுகமளித்த மக்கள் ஏழு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுச் சமய சம்பந்தமான பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி ஆராய்ந்து அவர்களது கருத்துக்கள் பொதுமேடையில் விவாதிக்கப்பட்டமையும், ஞானோபதேச மாதிரிப்பாட வகுப்புகளும், கருத்தரங்குக்கு மெருகூட்டியன என்றால் மிகையாகாது.

விவிலிய வழிபாட்டுடன் ஆரம்பமாகிய கருத்தரங்கு நற்கருணை ஆசீருடன் முடிவெய்தியது.

இக்கருத்தரங்கினை ஒழுங்கு செய்த, வழிநடத்திய, உரைகள் நிகழ்த்திய, ஒத்துழைத்த வண. குருப்பிரசாதிகள், கன்னியர்கள் மக்கள் அனைவரும் இறை அருளினால் நிறைவுறுவார்களாக,

## புனித சூசையப்பர் விழாவும் பெற்றோர் தினமும்

பங்குனித்திங்கள் 18-ம் நாள் நவேசோலை புனித சூசையப்பர் குருமடத்தில் குருமாணவர்களும் குருக்களும் தம் பாதுகாவலர் தினத்தையும், பெற்றோர் தினத்தையும் மிகச் சிறப்புடன் கொண்டாடினர். இவ் வைபவத்திற்குப் பிரதம விருந்தினராக முன்னாள் இம்மட அதிபரான வண. பசில் வீரதுங்க (அ. ம. தி.) அவர்கள் அழைக்கப்பட்டிருந்தார்கள். அன்று காலை 10மணியளவில் கூட்டுத்திருப்பலி ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெற்றது. அதில் குருமாணவர்களும் அவர்கள் பெற்றோரும் பங்குபற்றித் திருவிருந்து அருந்தினர். தற்போதைய குருமடாதிபர் வண. பீற்றர் பாணந்து (அ. ம. தி.) அவர்களால் சிங்களமொழியில் திருவுரை ஆற்றப்பட்டது. அதன்பின் தரைப்படைத் தலைவர் திரு. குருசுமுத்து அவர்களால் குருமாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்ட அணிவகுப்பும், தேகாப்பியாசங்களும் இடம்பெற்றன. இதன் இறுதியில் பிரதம விருந்தினரால் நல்லொழுக்கத்தைப்பற்றிய சொற்பொழிவொன்று ஆற்றப்பட்டது. பின் யாவரும் மதியபோசனம் அருந்தினர். இறுதியில் சில விசேஷ நிகழ்ச்சிகளுடன் விழா இனிதே முடிவெய்தியது.

—நிருபர்

# செங்குருதியிலே செங்காந்தள் மலரோ?.....

## காணும் காட்சி என்ன....

மயக்கும் மாலைப்பொழுது மானிலத்தை மூடிவரும்வேளை அது. பாடிப்பறந்தோடும பறவையினமுடன் துள்ளியோடும் புள்ளினமும் கூடவே இருப்பிடம் நாடித்திரும்புகின்றன. தொழில்தேடித் தூரப் பயணம் போன பாட்டாளி வர்க்கம் இரவின் அமைதிகாண இல்லம் தேடித் திரும்பியது. இதனால் அந்தப் பெத்லகேம் சிற்றூரின் சிறிய வீதிகளும் கூடவே பிரயாணிகளால் நிறைந்து வழியும் காட்சியினை வழமைபோல் வீதியருகே அமர்ந்து ரசித்தபடி அமர்ந்திருந்தான் நத்தனி. வீதியருகு வீடுகளின் கதவு தட்டி வாடியவதனத்துடன் மீளும் உருவங்களின் நிலை வழமைக்கு மாறுபட்ட நிகழ்ச்சியாக அன்று அவன் உள்ளத்தைத் தொடுகின்றது.

## அறியும் செய்தி என்ன....

இளகியமனம் செய்தியறியத் துடித்தது. பகலில் சத்திரத்தில் உழைத்த அவனின் பாலிய உடலோ எழும்ப மறுத்தது. எனினும் எழுந்தே நடந்தான் அவ்வுருவங்கள் அருகிலே. கன்னிப்பெண்ணின் தோற்றத்திலிருந்தே நிலைமையை விரைவில் தெரிந்துகொண்ட நத்தனி தூரத்தில் ஒன்றை அந்த இளம் ஜோடிகளுக்குச் சுட்டிக்காட்டினான். நட்டாற்றில் தவிப்பவர்களுக்கு நல்லபடகோட்டியென வாய்த்த அந்தச்சிறுவனை கைவிளக்கு ஒன்றுடன் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தனர் இருவரும்.

## நாடும் இடம் என்ன....

சிலவினாடிகளில் மூவரும் குகையொன்றை அடைந்தது தான் தாமதம் சிறுவன் தனக்கே உரிய சுறுசுறுப்புடன் ஒழுங்கீனமாகக் கிடந்த குகையை ஒழுங்காக்குவதில் முனைந்தான். இருவருக்கும் சிறுவன்மேல் அன்பும் இரக்கமும் ஏற்பட்டது. இதனிடையில் இரவுப்பெண் கடமைக்கு வந்துவிட்டாள். நத்தனி அவர்களை விட்டு அகலவேயில்லை. உடலில் அசதி தோன்ற குகையின் பக்கத்தேயுள்ள பாதையின் மேல் படுத்துக்கொண்டான். வானிலே கண்சிமிட்டும் விண்மீன்களுடன் உறவாடியபடியே உறக்கத்தில் ஆழ்ந்துவிட்டான்.

## துலங்கும் தாரகை என்ன....

சிலநிமிடங்களில் நல்ல தூக்கம் அவனை ஆட்கொண்டுவிட்டது. நடுநிசிவேளை. எங்கும் ஒரே அமைதி திடீரென அவன் தூக்கம் கலைந்து விழித்தான். அவன் உறவாடிய அதே விண்மீன்களிடையே பேரொளிவீசும் உதய தாரகை கண்டான். அடுத்து அவன் பார்வை குகை சென்றது. அங்கும் ஒரே ஒளிமயம். என்றும் கேட்டிராத இனிய கானம் வேறு செவியைநிறைத்தது. குகையண்டை ஓடியவன் உள்ளே புல்லணைமீது காணும் காட்சி கனவல்ல என்பதையும் கண்களைத் துடைத்து உணர்ந்துகொண்டான்.

## பார்க்கும் அதிசயம் என்ன....

கன்னிமரியாளும் சூசைத் தாத்தாவும் அழைக்க உள்ளேசென்றவன் பாலகக்குழந்தை ஒன்றைக்கண்டான். நத்தனியைக் கண்டதுமே குழந்தை புன்னகை புரிந்தது. நத்தனியின இன்பத்திற்கு எல்லையே இல்லை. குழந்தை அருகே அமர்ந்துகொண்டவன் குழந்தை விளையாடத் தன இதயத்தையே பறித்துக் கொடுப்பவன்போல அங்கு முளைத்துக்கிடந்த புற்களில சிலவற்றைப் பிடுங்கி அப்பிஞ்சு விரல்களில் கொடுத்தான்.

காமல் இக்னேஷியஸ்

பாலகன் பிடித்ததுமே அப் பச்சைப் புற்கள் செந்நிற மலராக மாறின. நத்தனி ஆனந்தக் கூத்தாடினான். இவ்வதிசயத்தினை—மலர் அழகினை—விழிமூடாது விடியும்வரை பார்த்துப் பரவசம் எய்தினான். காலைப்பொழுது புலர்ந்தது; சத்திரத்தொழிலும் தன்பெற்றோரின் நினைவும் மேலெழுப்பிப் பிரிய மனமில்லாது மூவரிடமும் விடைபெற்று வீடுதிரும்பினான் நத்தனி.

## திரும்பும் திசை என்ன....

காலச்சுழற்சியில் ஆண்டுகள்பல உருண்டோடிய அதேவேளை திரைப்படம்போல் மனத்தில் ஓடிக்கொண்டிருந்த குகை நினைவுகளும் தேய்ந்துகொண்டே சென்றன. நத்தனியின் இளகியமனமோ இப்போதெல்லாம் இரும்புஇதயமாக மாறிவிட்டது. நாற்பத்தைந்து நீண்டவருடங்களைப் புரட்டிவிட்ட பெரிய ஆசாமியாகிவிட்ட அவனை வாழ்வின் வறுமை நிலையும் சந்தர்ப்ப சூழ்நிலையும் சேர்ந்து திசை திருப்பிவிட்டது பணப்பேராசைக் காரணமாகிய பாக்காத் திருடனாகி கொள்ளைக் கூட்டமொன்றின் மாபெரும் தலைவனாகவும் மாறியிருந்தான். அந்த ஜெருசலேம் நகரே நத்தனி தலைமையில் இயங்கிய கொள்ளைக் கூட்டத்தின் தீச்செயல்களால் கதிகலங்கிக் கொண்டிருந்தது.

## காணும் கோலமென்ன....

அன்று பெரிய வெள்ளிக்கிழமை விடியற்காலையிலேயே அதிர்ச்சிதரும் செய்திஒன்று அவனை எட்டியது. நத்தனியின் நண்பர்களில் கொள்ளைக் கூட்டத்தினரில் இருவர் பிடிபட்டுச் சிறைப்படுத்தப் பட்டுவிட்டார்கள் என்பதுதான் அச்செய்தியாகும். எப்படியும் இருவரையும தப்புவிக்கவேண்டும் என்ற நோக்குடன் ஆத்திரம் முந்தள்ள பிடிபட்ட இடத்திற்கு விரைந்த பொழுது காரியம மிஞ்சிவிட்டது. கல்வாரிமலை உச்சியிலே சிலுவைக்கழுமரத்திலே இருவரும் தொங்கிக்கொண்டிருந்தனர். "பேயோடாயினும பிரிவென்னில் கொடிதன்றோ" பின் வாங்கவில்லை, மலைஉச்சிக்கே ஏறிவிட்டான. ஏறியவன நண்பரை உற்றுநோக்கினன். அதேவேளை நண்பர் நடுவே தொங்கும் மூன்றுமவரையும அருகிலே ஆறுத்துயருடன் நிற்கும மாதுவையும் கண்டான். நிர்க்கதியாய்த் தொங்கும்நிரபராதியைப்பற்றிய வியத்தகு செய்திகளையும் முன்பு கேள்வியுற்றிருந்தான். சிந்தனை வலுத்தது. கடந்தகாலக் குகையின் நினைவு நிழற்படம் இதயத்திரையிலே திரையிட்டது. நத்தனி தன அன்றைய வாழ்வையும் இன்றைய நிலையையும உணர்ந்தான். இந்தக் கடின பாவிக்கும் மன்னிப்பு உண்டா? எப்படி நான் திருந்தியவனாக முடியும். எனக்கு மன்னிப்பே கிடையாது. அவன் உள்ளம் எரிமலையானது. இதோ அந்தக் கற்பாறையிலே வாட்சியின் கொடுமையால் கருகிப்போய் கிடக்கும் இந்தப் புற்கள் மீண்டும் துளிர்க்குமா? சிலுவையில் தொங்கும் யேசுவின் காயங்களிலிருந்து வடியும் இரத்தத்தில் ஒருதுளி அந்தப் புற்களிலேவிழ, அதனிடையே செந்நிறமலர் ஒன்று இதழ்விரித்து நின்றது. குகையிலே மலர்ந்த அதேமலர்; வேற்றுமையேயில்லை, நம்பிக்கை துளிர்விட்டது. தாய் மரியாளின் பாதங்களில் விழுந்தவன் எழுந்தபோது மன்னிப்புப்பெற்ற திருந்தியமனிதனாகி நின்றான் நத்தனி.

# கடவுளுக்கும் கல்லறையா? கல்லறைக்கும் காவலா?

S. F. சவுந்தரம் ம. ஆ.

உலக வரலாற்றிலே ஒருமுறை மட்டும் நடந்த ஒரு விபரீத சம்பவம் கல்லறைக்கு காவல் வைத்தது.

தங்கள் ஜென்ம விரோதியெனக் கருதிய மீட்பர் யேசுவை, தங்கள் எண்ணப்படியே அடித்து, உதைத்து அவமானத்தின் சிலுவைப் பலியை அவருக்குக் கொடுத்து இந்த உலகத்தில் இருந்து அவனை ஒழித்து விட்டோம் எனப் பெருமிதம் கொண்ட யூதகுருகும்பலுக்கு அவரின் உயிர்ப்பின் தீர்க்கவசனங்கள் திகிலை உண்டாக்கின.

"இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள்; மூன்று நாளில் திரும்பவும் அதைக் கட்டி எழுப்புவேன்."

"நீங்கள் என்னை யூதப்பிரமுகர்களுக்குக் கையளிப்பீர்கள்; அவர்கள் என்னை அடித்து உதைத்து சிலுவை மரணத்திற்குள்ளாக்குவார்கள், நானோ மூன்றும் நாளில் உயிர்த்தெழுவேன்."

"இதோ அடையாளம் கேட்கும் அந்நிய சந்ததிக்கு என்ன அடையாளம் சொல்வேன்; யோனுஸ் இறைவாக்கினரின் அடையாளம் அல்லாமல் வேறொன்றுமில்லை."

ஆம் இந்த இறைவார்த்தைகள் மகிழ்வு கொண்ட யூதப்பிரமுகர்களின் மகிழ்ச்சியைக் குலைத்தது. ஒருவேளை இந்தப் புதுமைப்பித்தன் உயிர்த்து விட்டால் நம்முடைய திட்டங்கள், முயற்சிகள் எல்லாம் பயனற்றவையாய் போய்விடுமே எனக் கலங்கினர்.

ஒளியைப் பார்க்கமாட்டேன் எனக் கண்களை மூடிக்கொண்டு நடப்பவன் எப்படிக் கலக்கமின்றி நடக்கமுடியும். உண்மை ஒளியை வேண்டுமென்றே எதிர்த்து மனச்சாட்சியைக் கடினப்படுத்திக் கொண்டவர்கள் எப்படி நிம்மதியாக வாழமுடியும்.

இறைமகன் தன்னைப்பற்றிக் கூறியது உண்மையெனக் காட்ட எடுத்தாண்ட சான்றுகள், புதுமைகள், போதனைகளை ஏற்றுக் கொள்ளாது கல்லான நெஞ்சங்களைக் கொண்ட இந்தப் பெரிய மனிதர்கள் வெகு விரைவில் மனச்சாந்தியை இழந்தனர். 'யேசுவின் திருவுருவம், தோன்றத் தோன்றி மனவேதனையைக் கொடுத்தது. உயிர்த்து விட்டார்; நடக்கவேண்டியது என்ன? எனக் கவனிக்க குருகுழுவினர் கூடினர்.

இறந்தவன் எப்போதாவது உயிர்த்ததுண்டா? மீளவும் உயிர்ப்பான என்பது இயலாததொன்று. உயிர்த்துவிட்டால் என்ன செய்வது என்று சிந்திப்பது தவறு. கலங்கவேண்டாம்; ஆனால், கவனிக்கவேண்டிய விஷயம் வேறொன்றுண்டு. மாத்த மனச்சாட்சிக்காரனின் சொற்பொழிவு இது. உயிர்க்கமாட்டான், நடக்காது, ஏற்றுக் கொண்டனர் எல்லோரும். கவனிக்க வேண்டியது என்ன? ஒருவேளை நமது விரோதியின் மூடர்கள் அவனது உடலை திருடிச்சென்று யேசு உயிர்த்துவிட்டாரென மக்களை ஏமாற்றக்கூடும். இது ஒன்றுதான் கட்டாயம் நடக்கக் கூடியதொன்று; இது நிகழாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது நமது பெரியபொறுப்பு என்றனன்.

கல்லறைக்கு முத்திரையிட்டு காவல் வைப்பதற்கு உத்தரவு வேண்டி பிலாத்துவை அண்டியது யூதகுருகும்பல். அங்கே பிலாத்துவின் சினத்திற்காளானார்கள். "உங்களுக்கு தெரியுமல்லவா? உங்களிடம் காவலாளரும் உண்டல்லவா? நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லி அனுப்பி விட்டான். அவர்கள்போய் கல்லறைக்கு முத்திரையிட்டு ரோமைப்போர் வீரர்களைக் கொண்டு பத்திரமான காவல் வைத்தார்கள்.

ஆண்டவரின் ஆச்சரியமான இறைத்திட்டத்தை எங்கே இந்த அன்பர்கள் அறிந்துகொள்ளப் போகின்றார்கள். இறைசித்தப்படி மறைந்த யேசு மகிமையுடன் உயிர்த்தெழுந்தார். அன்பர்களின் முத்திரையும் பத்திரமான காவலும் அர்த்தமற்றதாகிவிட்டது.

இது நடந்து எத்தனையோ ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. ஆனால், இன்னும் மதிகெட்ட யூதர்கள் போல நம்மத்தியில் ஒரு சிலர் இருக்கத்தான் செய்கின்றார்கள். அண்டவெளியிலே பறந்தவிஞ்ஞானி கடவுளைக் காணவில்லை என்கின்றான். இன்றைய விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகளால், நவநாகரீகப் போக்குகளினால் கடவுளையும் அவரது ஆச்சரிய செயல்களையும, அவரில் விசுவாசத்துடன் வாழும் மக்களின் வாழ்க்கையையும், அர்த்தமற்றதாகக் கருதி, மறைத்துவிடப் பார்க்கின்றார்கள். மரணத்தின்பின் உயிர்ப்பா? இறப்பின் பின் வாழ்வா? என்று கேட்கவும் நடக்கவும் துணிகின்றார்கள்.

ஆம் இவர்களுக்கு மதிகெட்ட யூதரின் கல்லறைக் காவலும், கிறிஸ்துவின் வெற்றி உயிர்ப்பும் ஒரு நல்லபாடத்தைப் படிப்பிக்கட்டும்.

"மரித்தும் எழுந்த சத்தியமே
மரணம் இன்மையின் தத்துவமே."

**மாகுருஸ் பூ வியாபாரி**

❋ தரத்தில் சிறந்த பூக்களும், மரக்கறி வகைகளும் எம்மிடம் கிடைக்கும்.

❋ நம்பிக்கையும், நாணயமும் எமது குறிக்கோள்,

❋ வாடிக்கைகாரரைத் திருப்திப்படுத்துவதே எமது இலட்சியம்.

19, லேடி மக்கலம் டிரைவ்,
நுவரெலியா.

நெடுந்தீவு மத்தி
**வயித்தியான் மரியாம்பிள்ளை**
அவர்கள்
அமரத்துவமடைந்த

## 2-ம் வருட ஞாபகம்

**மறைவுதினம்— 10-4-69**

நித்திய இளைப்பாற்றியை
இவருக்கு இறைவன் அளிப்பார்
சமாதானத்தில்
இளைப்பாறுவாராக

இவரது ஆன்மசாந்திக்காக 5-4-71இல் நெடுந்தீவு புனித யுவானியார் ஆலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர் கன்னியர், மற்றும் உறவினர், சிநேகிதர் யாவரும் இவருக்காக மன்றாடும்படி பரிவுடன் கேட்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், உறவினர்.
நெடுந்தீவு

அன்பு எதையும் கேட்பதில்லை; கொடுக்கின்றது. உண்மையினாலும், அன்பினாலும்தான் உலகத்தையே வெற்றிகொள்ள முடியும்என்பது என் உறுதியான நம்பிக்கை.

— மகாத்மாகாந்தி

*சத்தியவேத பாதுகாவலன்*

# பாஸ்கா என்னும் பரமரகசியம்

பாஸ்கா காலத்தில் திருச்சபை தனது திருச்சடங்குகளில் மையக் கருத்தாகக்கொண்டுள்ளது கிறிஸ்து மரணத்தின்மேல் கொண்ட வெற்றியே. ஆதியில் அப்போஸ்தலர் ஜெருசலேமில் பிரசங்கித்தபோது மற்றெல்லாவற்றிலும் பார்க்க இந்த உண்மையைத்தான் வலியுறுத்தினார்கள்.

தேவனால் அனுப்பப்பட்ட திருக்குமாரனைக் குறுகிய மனப்பான்மையும், தேசியவாதமும்கொண்ட யூதர் கொலை செய்தனர். அவரது நற்செய்தியைப் புறக்கணித்தனர். ஆனால் எல்லாம் அதோடு முடிந்துவிடவில்லை. மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்த கிறிஸ்து அநேகருக்குக் காட்சியளித்தார். அதன்பின் அவர்கள் இச் செய்தியைப் பரப்பும் பணிக்கே தம் வாழ்வை அர்ப்பணித்தனர். நசரேனுவாகிய யேசு தான் வாக்குப்பண்ணப்பட்ட மெசியா என்பதையும் அவரது போதனைகள் யாவும் உண்மை என்பதையும் இந் நிகழ்ச்சி பூரணமாக நிரூபிக்கிறது என அவர்கள் எடுத்துக்காட்டினார்கள்.

கிறிஸ்துநாதர் மரணத்தின்மீது கொண்ட வெற்றி அவரது தெய்வீக வல்லமையைக் காட்டியதோடு, தடுமாறும் மனிதனுக்கு ஒரு நம்பிக்கையை ஊட்டுகின்றது. இவ்வுலகைச்சார்ந்த பொருள்களில் தேவனின் வல்லமை எவ்விதம் செயல்படுகின்றதென்பதையும், அசாத்தியமாகத் தோன்றும் காரியங்கள்கூட தேவனுக்கு சாத்தியமானவையே என்பதையும் உணர்த்துகிறது.

நத்தார் கிறிஸ்துவின் மனுஷீகத்தின்—அவரது மனித அவதாரத்தின் திருநாளாயிருக்க, பாஸ்கா அவரது தெய்வீகத்தின் திருநாளாக இருக்கின்றது. இத்தினத்திலே இறைவனது எல்லையற்ற வல்லமைக்கும் மனிதனது எல்லைக்குட்பட்ட சக்திக்கும் உள்ள வேறுபாட்டைக் காண்கிறோம். கிறிஸ்துவின் உத்தானமே அவரது புதுமைகளுட் பெரியது. அது அவரது தெய்வீகத்தைச் சந்தேகமற நிரூபித்துவிடுகின்றது. இறைவனது வல்லமைக்கும் மனிதனது வல்லமைக்குமுள்ள வேறுபாட்டை, அளவைமட்டுமல்ல, தன்மையையும் அது எடுத்துக்காட்டுகின்றது.

மனிதனது அற்புதமான வேலைகளெல்லாம் இயற்கைச் சக்திகளினாலேயே நடைபெறுகின்றன. ஆனால் ஒரு புதுமையோ இயற்கைக்கு மேம்பட்ட இறைவனது செயலாகும்.

பாஸ்கா விசுவாசத்தின் திருநாளுமாகும். கல்லறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பெண்கள், "எமக்காக யார் அக்கல்லை உருட்டிவிடுவார்கள்?" என்று தமக்குள் பேசிக்கொண்டனர். கல்லைத் தம்மால் உருட்ட முடியாது என்று தெரிந்தபோதிலும் அவர்களை முன்னே செலுத்தியது என்ன? அப்போதுகூட இறைவனது சித்தத்தை செய்ய முயலுவோருக்கு அவரே ஒரு வழியைக் காட்டுவார் என்ற மங்கிய விசுவாசம் அவர்கள் உள்ளத்தில் இருந்தது. கிறிஸ்துவின் உத்தானத்தின்பின் அவரது போதனைகள் உறுதிபெற்றன, விசுவாசம் சுலபமானதாகியது.

பாஸ்காவின் வெற்றி மனுஷீகத்தின்மீது தெய்வீகம் அடைந்த வெற்றி. சடப்பொருளின்மீது ஆன்மா அடைந்த வெற்றி. இறைவனின் கரத்தைத்தவிர மனிதருக்கு அசாத்தியமான செயல்களைச் செய்யவும் மனிதருக்குக் கஷ்டமாகத் தோன்றுவனவற்றை சுலபமாக்கவும் வேறுயாரால் முடியும்?

மனிதன்மீதும் சகல படைப்புகள்மீதும் இறைவனுக்குள்ள வல்லமையை பாஸ்கா வெளிப்படையாகக் காட்டுவதுடன் இறைவனின் திட்டத்தில் மனிதனின் இடம் எது என்பதையும் குறிக்கிறது. அதாவது அந்த வெற்றியில் பங்குகொண்டு அதைத் தனக்கும் சொந்தமாக்கிக் கொள்வதாகும்.

# மகா மேன்மைதங்கிய கருதினல் தோமஸ் கூறே ஆண்டகை அவர்களின் ஆசிச் செய்தி

அதிமேற்றிராணியார் இல்லம்,
கொழும்பு 8, இலங்கை.

மரியாயின் சேனையின் 50-ம் ஆண்டு பொன்விழா, அதன் அலகுகள் ஒவ்வொன்றும் (பிரெசிடியம், கியூரியா, கொமித்சியம், செனத்துஸ், கொன்சீலியம்) தத்தமது அப்போஸ்தலத்துவத்தில் மறுமலர்ச்சியை அடைந்துகொள்ளவும், அதன் அங்கத்தினர் சகலரும் தங்களது ஆன்மீக வாழ்வை ஆழமாக்கிக் கொள்ளவும் ஓர் அரிய சந்தர்ப்பத்தை அளிக்கின்றது.

அப்பொழுதுதான் இரண்டாம் வத்திக்கான் பொதுச் சங்கம் எதிர்பார்ப்பவற்றை இல்லறவரின் சிறந்த அமைப்பு முறையைக்கொண்ட சேனையானது நிறைவுபடுத்தவும், சேனை சேவை செய்யும் நிலையங்களில் (விசாரணைப் பங்குகள், பக்திச்சபைகள், குழுக்கள், பொதுநிலையினர்) அந்தச் சேவையை நல்லுறவுடனும், சக்தியுடனும் செய்யவும் முடியும்.

திருச்சபையில் இருக்கும் இயக்கங்களில் சிறந்த இயக்கமான சேனையும், தற்காலத்தில் திருச்சபை எதிர்நோக்கும் பெரிய பிரச்சனையான "விசுவாசக் குறைவை" எதிர்த்துச் சக்தியுடன் போராடி வருகின்றதென்பதை இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது. கடந்த அரைநூற்றாண்டு காலமாகச் சேனை எந்த ஆர்வத்தினால் ஆரம்பிக்கப்பட்டு, உலகினுள் உந்தப்பட்டதோ, அதே ஆர்வத்தினால் தூண்டப்பட்டு, பரி. பிதா 12-ம் பத்திநாதர் கூறியது போல, "நல்லவரினதும் பக்திமான்களுடையதுமான பெலவீனமான" விசுவாசக் குறைவுக்கெதிராகப் போராடி வருகிறது.

எமது ஈழத்துச் சேனையாளர் தங்கள் பொன்விழாவைப் பாஸ்கா சம்மேளனத்துடன் கொண்டாடுகிறார்கள். பெயருக்கேற்ற உட்கருத்துக் கொண்ட இச் சம்மேளனம் பிரச்சனைகளுக்குத் தகுந்த பரிகாரமாக அமையும் என்பதில் சந்தேகமில்லை. சேனையாளர் தங்கள் இலட்சியங்களையும், நோக்கங்களையும் உணர இது துணைபுரியும். அவர்களுடைய ஆழமான விசுவாசத்தில் ஒரு புதிய சக்தியையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தும். இச்சேனையாளரின் அணிவகுப்பு, சாத்தான், மரணம், பாவம் ஆகியவற்றின் மேல் கிறீஸ்து அடைந்தவெற்றியின் அழியாச் சின்னமாக இருக்கும்.

சேனையாளரின் இலட்சியத்தைப்பற்றி அவர்களுடைய கைபேடும், பாரம்பரியமும் எடுத்துக்காட்டுகின்றன. எக்காலமும் தேவதாயின் மூலமும் அவளுடைய மாசில்லாத உற்பவித்தலின் தனித்துவ தன்மையின் மூலமும்தான் உயிர்த்த இரட்சகரான கிறீஸ்து, தற்கால தீமைகளின் மேலும், ஆன்மீக அவலநிலையின் மேலும் தமது வெற்றியைப் புதுப்பிக்கின்றார்.



திருச்சபைச் சரித்திர சம்பவங்கள் மூன்றின் யூபிலியோடு சேனையின் பொன்விழா இணைந்துவருவது எமக்கெல்லாம் உற்சாகமூட்டுவதாக அமைகிறது. எமது நாயகியாகிய பரிசுத்த கன்னி மரியம்மாள் 'போட்மெயின்' எனும் இடத்தில் அளித்த காட்சியின் 100-வது வருடமும், பாத்திமாநாயகி உலகின் இராக்கினியென பரி. பாப்பிறை 12-ம் பத்திநாதரால் முடிசூட்டப்பட்ட வைபவத்தின் வெள்ளிவிழாவும, புனித சூசையப்பர் திருச்சபையின் பாதுகாவலர் எனப் பிரகடனப் படுத்தப்பட்டதின் நூறுவது ஆண்டும் இந்த 1971-ம் ஆண்டிலேதான் இடம்பெறுகின்றன.

மாசில்லாத் தாயின்மூலம் புனித சூசையப்பரின் பாதுகாவலுடன் சேனையாளர் தங்கள் இறக்கைகளை அகலவிரித்து, தேவநேச அக்கினியால் சுவாலித்தெரியும் இதயங்களோடு முன்சென்று, உயிர்த்த யேசுவின் உறுதுணையோடு சேவை செய்வார்களாக.

+ தோமஸ் கருதினல் கூறே,
அ. ம. தி.
கொழும்பு அதிமேற்றிராணியார்.
2-3-1971.

## உங்கள் சிந்தனைக்கு....

**உத்தியோகபூர்வமான சேனைக் கையேட்டிலிருந்து சில பகுதிகளை உங்கள் சிந்தனைக்காகத் தருகிறோம்.**

1. மரியாயின்சேனை கத்தோலிக்கரை அங்கத்தினராகக்கொண்ட ஒரு சங்கம். சந்திரனைப்போல் அழகுவாய்ந்தவளும், சூரியனைப்போல் ஒளியுள்ளவளும், போர்முனையில் அணிவகுத்து நிற்கும் படையைப்போல் பசாசையும் அவன் ஏவலாட்களையும் நடுநடுங்கவைப்பவளும், எல்லா அருள்வரங்களும் நமக்குப் பகிர்ந்துதரும் காரணியுமான கன்னிமரியம்மாள் இச் சங்கத்திற்குத் தலைவியாக விளங்குகின்றாள்.

2. அங்கத்தினர்களைப் புனிதப்படுத்துவதே சேனையின் நோக்கம். இந்த நோக்கத்தை அடைவதற்குரிய இரண்டு வழிகளைச் சேனை காட்டித்தருகின்றது. அவை செபமும், சேவையுமாகும்.

3. மரியாயின் மனப்பான்மையே சேனையின் மனப்பான்மையாகும்.

4. சேனை தன் அங்கத்தவர்களிடம் செல்வத்தையோ செல்வாக்கையோ எதிர்பார்க்கவில்லை, உறுதியான விசுவாசத்தைத்தான் கேட்கின்றது. பகட்டான செயல்களை எதிர்பார்க்கவில்லை; விடா முயற்சியைத்தான் கேட்கிறது. நிகரற்ற திறமையை எதிர்பார்க்கவில்லை; ஆழ்ந்த அன்பைத்தான் கேட்கிறது. இராட்சதனுக்குரிய வலிமையை எதிர்பார்க்கவில்லை; கட்டுப்பாட்டையும்ஒழுங்குப்பயிற்சியையும்தான் கேட்கிறது.

5. சேனை ஆற்றும் அப்போஸ்தலத்துவத்தின் இன்றியமையாதபணா பு குருமார்கள் மீதுள்ள மதிப்பும் பற்றுதலும்தான்.

6. சேனையாருள் பலர் நாளடைவில் துறவறத்திற்கான தேவ அழைத்தல் பெறுகிறார்கள் என்பது சேனை ஊழியத்தின் ஒரு தனிச் சிறப்பாகும்.

R. C. M.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு சித்திரை மாதம் 24-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக்பிறஸ்," யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.